## முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு

| | | | | |
|---|---|---|---|---|
| வழக்கு எண் | OS | 237 | of | 2019 |

**2025–ம் ஆண்டு ஜூன் திங்கள் 11–ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா.ஆ.1–வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade–I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நெல்சன் சாமுவேல் | தந்தை பெயர் | |
| கிராமம் | | கணவர் பெயர் | |
| ஜாதி | | தாலுக்கா | |
| | | சமயம் | |
| தொழில் | | வயது | |

**நாள்– 11.06.2025.**
**வா.சா.–1**
**குறுக்கு விசாரணை–**

தாவா 28.06.2021 அன்று இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. வாதிநிறுவனத்திற்கு 3 பேர் பங்குதாரர்கள். நான் அதில் managing director ஆக உள்ளேன். பங்குதாரர்கள் பெயர் நான் நெல்சன் சாமுவேல், ஏ.காட்வின் நெல்சன், எம்.ராஜேஷ் ஆகும். வாதி நிறுவனம் பதிவு பெற்ற நிறுவனம் ஆகும். பதிவு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் 2010 ம் ஆண்டு முதல் இந்த நிறுவனத்தை நடத்தி வருகிறோம். சுமார் 100 கட்டிடங்கள் கட்டியிருக்கிறோம். எங்கள் நிறுவனத்திற்கு முத்திரை உள்ளது. அது பயன்படுத்தப்பட்டு வருகிறது. வழக்குரையை படித்துப் பார்த்துதான் கையெழுத்து போட்டேன். 1,2 பிரதிவாதிகள் 30 ஆண்டுகளாக தெரியும். 2013 ம் ஆண்டு கட்டுமானம் சம்மந்தமாக 1,2 பிரதிவாதிகளிடம் பேசினேன். 1,2 பிரதிவாதிகளை வேளச்சேரி, 10 டவுன் mint street apartment ல் வைத்து சந்தித்து பேசினேன். அங்கே கண்ணன் நாராயணன், மனைவி காயத்ரி, சகோதரி ஆனந்தி ஆகியோர் இருந்தவர்களை பார்த்து பேசினேன். 1,2

பிரதிவாதிகள் வீடு வேளச்சேரி , அண்ணாநகரில் அமைந்துள்ளதில் சென்று பேசினேனா என்றால் நான் அங்கு செல்லவில்லை. அங்கு வைத்து அவரிடம் பேசவில்லை. வா.சா.ஆ.1 பொது அதிகார பத்திரத்தில் எங்கள் நிறுவன முத்திரை இல்லை. பதிவாளர் வற்புறுத்தாததால் முத்திரை இடவில்லை. வேண்டுமென்றே முத்திரையிடாமல் இருந்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பொது அதிகார பத்திரத்தில் கண்டுள்ள சொத்து 1,2 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது. தரப்பினர்களுக்குள் ஏற்பட்ட ஒப்பந்ததின் படி கட்டுமானத்தில் 45% வாதி நிறுவனத்திற்கு சேர வேண்டும். அந்த 45%படி 6 plot எங்கள் நிறுவனத்திற்கு சேரவேண்டும். வா.சா.ஆ–2 ல் எங்கள் நிறுவன முத்திரை இடப்படவில்லை. வா.சா.ஆ.2 பதிவு செய்யப்பட்ட ஆவணம் இல்லை. வா.சா.ஆ.2 ல் 12 மாதம் கால நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் 12 மாதத்தில் கட்டுமானம் முடிக்கப்படவில்லை என்றால் சரிதான். ஒப்பந்தம் அதன்பிறகு renewal செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 தவிர joint venture என்ற அடிப்படையில் வேறு ஒப்பந்தம் எதுவும் போடப்படவில்லை. ஒப்பந்தம் renewal செய்யப்படாததாற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை. 6 plot களை கட்டுமானத்திற்கு பிறகு நாங்கள் விற்றுவிட்டோம். 2015 ம் ஆண்டு plot No.1 விற்றோம் என்றால் சரிதான். அதை காட்டக்கூடிய கிரய பத்திரம் ஆன்லைன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.1** ஆகும். அந்த ஆண்டே plot No.2 விற்றோம் என்றால் சரிதான். அதை காட்டக்கூடிய கிரய பத்திரம் ஆன்லைன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.2** ஆகும். 2016 ம் ஆண்டு construction agreement ஆன்லைன் சான்றிட்ட நகல் காட்டப்பட்டதுதான். அது **பி.வா.சா.ஆ.3** ஆகும். 2017 ம் plot No.3 விற்றோம் என்றால் சரிதான். அதை காட்டக்கூடிய கிரய பத்திரம் ஆன்லைன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.4** ஆகும். MOD ஆன்லைன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.5** ஆகும். 24.11.2017 தேதியிட்ட கிரய பத்திரம் ஆன்லைன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.6** ஆகும். பி.வா.சா.ஆ.6 ல் எங்கள் நிறுவன முத்திரையிடப்பட்டுள்ளது. 2018 ம் ஆண்டில் 2 plot கள் விற்கப்பட்டுள்ளது. 20.03.2018 தேதியிட்ட கிரய பத்திரம் ஆன்லைன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.7** ஆகும். 2018 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மற்றொரு கிரய பத்திரம்

ஆன்லைன் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.8** ஆகும். மேற்படி கிரய பத்திரங்கள் மூலம் UDS share விற்கப்பட்டுள்ளது. தாவாவில் ரூபாய் 15 லட்சத்து 63 ஆயிரத்து 270 தொகை கோரப்பட்டுள்ளளது. பி.வா.சா.ஆ.8 ல் எங்கள் நிறுவன முத்திரையிடப்பட்டுள்ளது. இந்த தாவாவை போடுவதற்கு முன்பே 1ம் பிரதிவாதி என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. ஜுலை 2019 ல்தான் எனக்கு புகார் பற்றி தெரியவந்தது. காட்டப்பட்ட அந்த புகார் ஜெராக்ஸ் நகல் **பி.வா.ஆ.9** ஆகும். போலீசார்என் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். அந்த முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் **பி.வா.ஆ.10** ஆகும். பி.வா.சா.ஆ.4 சொத்தை பங்குதாரர் ராஜேஷ் என்பவர் எனக்கு விற்றார். 2015 ம்ஆண்டு பதிவு செய்த ஆவணங்களில் life certificate பயன்படுத்தப்பட்வில்லை என்றால் சரிதான். 2017 ம் ஆண்டு பதிவு செய்த ஆவணங்களில் life certificate பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த life certificate போலியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் 1,2 தான் அதற்கான ஆவணங்களை கொண்டுவந்தார்கள். 1,2 பிரதிவாதிகள் தான் அசல் ஆவணங்களை பதிவாளர் அலுவலகத்திற்கு கொண்டுவந்தார்கள். கட்டுமானம் சம்மந்தமாக என் மீது பல வழக்குகள் உள்ளன என்றால் சரியல்ல. தாம்பரம் சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதுபற்றி ஞாபகமில்லை. முதல் தகவல் அறிக்கையை அடுத்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு என் மீது வழக்கு நடந்து வருகிறது.

T CHANDRASEKARAN

Principal District and Sessions Judge
Digitally signed by T CHANDRASEKARAN
Location: Chengalpattu
Date: 2025.06.16 13:08:22 +0530